விலை: 50.00
பக்கங்கள் : 11
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 180 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 02 சனிக்கிழமை (17.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

TECHNO WORLD
A/L தொழில்நுட்பப் பிரிவு
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை
புதிய பிரிவு
A/L 2025
ஆரம்பம் 18.06.2023 ஞாயிற்றுக்கிழமை
நேரம் காலை 8.30 எமக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை
077 017 5346 (C-6753)

வெவ்வேறு சம்பவங்களில்

## யாழைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் சடலங்களாக மீட்பு



(யாழ்ப்பாணம்)

இரு வெவ்வேறு சம்பவங்களில்யாழைச் சேர்ந்த பொறியியல் பீட மாணவர்கள் இருவர் நேற்று சடலங்களாக 02



## சென்னையிலிருந்து பயணிகள் கப்பல் நேற்று காங்கேசன்துறை வந்தடைந்தது

- பரீட்சார்த்த முயற்சி நேற்று முன்னெடுக்கப்பட்டது.
- 100க்கு மேற்பட்ட பயணிகள் யாழ்.வந்தடைந்தனர்.



(யாழ்ப்பாணம்)

சென்னையில் இருந்து 100 இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் சுற்றுலாத்துறை 11

# யாழ்ப்பாணம் - சென்னை கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் தாமதம்

## யாழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா



(காங்கேசன்துறை)

சென்னைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இந்த வருட இறுதிக்குள் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்பொழுது காணப்படவில்லை என விமான சேவைகள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வா காங்சேன்துறையில் வைத்து தெரிவித்தார். *(11ஆம் பக்கம் பார்க்க)*

## பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு தொடர்பில்

அமைச்சர் நிமால் தலைமையில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் விஸ்தரிப்பு தொடர்பில் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் நேற்று ஆராயப்பட்டது.

இந்த விஸ்தரிப்பு தொடர்பில் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, கிராமிய பொருளாதார இராஜாங்க 12

## ஆட்டோ பாலத்தினுள் விழுந்து விபத்து

பெண் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

வவுனியா மறவன்குளம் பகுதியில் உள்ள தனது வீடு நோக்கி குறித்த பெண் முச்சக்கரவண்டியில் பயணித்துள்ளார்.

இதன்போது கட்டுப்பாட்டை இழந்த 11

## காங்கேசன்துறை நவீன பயணிகள் முனையம் திறப்பு



(காங்கேசன்துறை)

துறைமுக அதிகார சபையினால் நிர்மாணிக் கப்பட்ட காங்கேசன் துறை நவீன பயணிகள் முனை யம், நேற்று கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச் 11

## வவுனியாவில் ஹன்டர் மோதியதில் தாயும் மகளும் ஸ்தலத்தில் பலி

- மகளை பாடசாலைக்கு அழைத்து செல்லும்போது கோரம்.
- பொதுமக்கள் ஹன்டரை எரிக்க முற்பட்டதால் பரபரப்பு. *(11ஆம் பக்கம் பார்க்க)*



## வாகனங்களை இறக்குமதி செய்ய தற்போது அனுமதிக்க முடியாது

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்

(கொழும்பு)

தற்போதைய நிலையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்க முடி யாது என் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலா பிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த நாட்களில் அத்தியா வசிய எரிபொருள் கொள்வன விற்காக பெற்றோலிய கூட்டுத் தாபனம் ஒரே நேரத்தில் சுமார் 75 முதல் 80 மில்லியன் டொலர்களை கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டது.

அதை சந்தை மற்றும் மத் திய வங்கியிடம் இருந்து கொள் வனவு செய்தது.

இதனால் டொல 11

## ஐரோப்பிய நாடுகள் மீது அணுகுண்டு தாக்குதல்?

ரஷ்ய மக்களை வெளியேற உத்தரவு

(மொஸ்கோ)

ஐரோப்பிய சில நாடுகள் மீது அணுகுண்டுத் தாக்குதல் இடம்பெறலாம் என எச்சரிக் கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நாடுகளிலி ருந்து ரஷ்ய மக்கள் உடனடி யாக வெளியேற வேண்டும் என அரசாங்கம் தரப்பில் எச் சரிக்கை விடுக்கப்பட்டுள்ள தாக தகவல் வெளியாகியுள் ளது.

பிரித்தானியாவும் அமெரிக்காவும்தான் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழை...

மீட்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் மூன்றாம் வருட மாணவன் ஒருவரின் உடல் விடுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டதாக மஹரகம பொலிஸார் தெரிவித்தனர்.

ஊர்காவற்துறை நாரந்தனை வடக்கு பகுதியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் அபிநஜன் (வயது 23) என்பவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொரலஸ்கமுவ கட்டுவல பிரதேசத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் வாடகை அடிப்படையில் எடுக்கப்பட்ட மாணவர் விடுதியின் தரைத்தளத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் முதலாம் வருட மாணவுன் ஒருவர் நேற்று பல்கலைக்கழகத்துக்குள் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பேராதனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் கல்வி கற்ற அல்வாய் மாலுசந்தியைச் சேர்ந்த நற்குணராசா குணதீஸ் (வயது -21) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பொறியியல் பீட மாணவர்கள் தங்கும் அக்பர் மண்டபத்தில் அவர் தங்கியிருந்த அறையின் கழிவறையில் அவரது சடலம் தூக்கில் தொங்குவதைப் பார்த்த மாணவர்கள், பல்கலைக்கழக பாதுகாப்புப் பிரிவினருக்குத் தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகமும் பேராதனைப் பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7.60)

## ஐரோப்பிய...

உக்ரைனுக்கு இதுவரை அதிகமான ஆயுதங்களை வழங்கியுள்ளது.

இதனிடையே, இந்த போரில் தம்முடன் இணையும் நாடுகளுக்கு அணு ஆயுதம் அளிக்கப்படும் என ரஷ்யா தற்போது வாக்குறுதி அளித்துள்ளது.

இதனிடையே, பெலாரஸ் நாட்டில் அணு ஆயுதங்களை நிலை நிறுத்த புடின் திட்டமிட்டுவருவதாக கூறப்படுவதை வரவேற்றுள்ள Segey Karaganov, ஜோ பைடனையும் கடுமையாக விமர்சித்துள்ளார்.

பெலாரஸ் நாட்டில் ரஷ்யாவின் அணு ஆயுதத்தை நிலை நிறுத்துவதை வரவேற்றுள்ள அந்த நாட்டின் அதிபர் Alexander Lukashenko, ஆனால் தற்காலத்தில் அணு ஆயுதங்களை பயன்படுத்துவதில் கவனம் தேவை எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ம-7)


## மரண அறிவித்தல்



### குழந்தைவேலு விநாயகமூர்த்தி

கச்சாய் வடக்கு கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள அம்பலத்தாடி வைரவர் ஆலய பூசகர் குழந்தைவேலு விநாயகமூர்த்தி அவர்கள் (06.06.2023) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு - ஈஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வல்லிபுரம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரி(தேவி) அவர்களின் அன்புக் கணவரும் தவமணி, காலஞ்சென்ற நடராசா, தவமலர், ஸ்ரீறங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மலிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (07.06.2023) அன்று நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஈச்சங்காட்டு இந்து மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

உசன் மிருசுவில் (C-6755) மனைவி வி. இராஜேஸ்வரி(தேவி)

## கண்ணீர் அஞ்சலி



சங்கானை பிறப்பு, இறப்பு பதிவாளரும்
வலிகாமம் மேற்கு விவாகப்
பதிவாளருமான

அமரர்


### தனபாலசிங்கம் ஞானபானு

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதோடு
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-6752)

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்
சங்கத்தினர்
யாழ். மாவட்டம்

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அன்புடையீர்,

கடந்த 20.05.2023 அன்று சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எம் குடும்பத் தலைவர்

### அமரர் கணபதிப்பிள்ளை திருச்செல்வராசா

(ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்.)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 17.06.2023 சனிக்கிழமை அன்று அதிகாலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும் 18.06.2023 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்


பொன்னாச்சி பதிப்பகம் முன்பாக,
7ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(15986)

இங்ஙனம்
குடும்பத்தினர்,
0779890083

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15
04
1947



மறைவு
17
06
2014

### அமரர் சிற்றம்பலம் சின்னத்தம்பி

( ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை )

திதி: 07.07.2023

அன்பின் ஆழூற்றாய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் இலக்கணமாய்
பொறுமையின் சிகரமாய்
பணியின் பண்பாளனாய்
வேண்டுவோர் நண்பனாய்
நிலம் வியக்க இங்கு நிறை வாழ்வு வாழ்ந்தவரே
ஆண்டுகள் நீண்டாலும் ஆறாது எம் துயரம்
இந்த நிலம் இருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

(15983)

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராதன சின்னங்களை
# இலங்கை அரசிடமிருந்து பாதுகாக்க உதவுங்கள்
## யுனெஸ்கோவிடம் கம்மன்பில கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கையின் தேசிய பாரம் பரியத்தை இலங்கை அரசாங்கத் திடம் இருந்து பாதுகாக்க உதவுமாறு ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார ஸ்தாபனத்திடம் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “வடக்கு மற்றும் கிழக்கில்உள்ள தொல்பொருள் புராதனச் சின்னங்களை அரசாங்கத்திடம் இருந்து பாதுகாக்க வேண்டிய நிலைக்கு பொதுமக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தொல்பொருள் பகுதியொன்றுக்கு காணிகளை வழங்குவது தொடர்பில் எழுந்த பிரச்சினையின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுரமானதுங்கவை கடுமையாகச் சாடினார். இச்சம்பவம் இடம்பெற்று சில நாட்களிலேயே பேராசிரியர் தனது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.

“நாங்கள் பாரம்பரிய தளங்களை பிரிவினைவாதிகளிடம் இருந்து பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களின் தவறான செய்திகளை எந்தவித தயக்கமும் கேள்வியும் இன்றி ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (நி)

# சரா.புவனேஸ்வரனின் மணி விழா நாளை

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளரும் தற்போதை ஆலோசகரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சரா.புவனேஸ்வரனின் மணி விழாவும் வெற்றித் தேர்வு நூல் வெளி யீடும் வைத்திய கலாநிதி லயன் வை.தியாக ராஜா தலைமையில் நாளை 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் சயன்ஸ் அக்கடமி வளாகத்தில் நடைபெறும்



இந் நிகழ்வில் அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சுப்பிரமணிய குருக்கள் முரளிதரக் குருக்கள், அருட் தந்தை எஸ்.ஏ.பொன்சியன் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

அதனைத் தொடர்ந்து வெற்றித் தேர்வு நூல் வெளியீடும் மணிவிழா நாயகனை வாழ்த்தி வாழ்த்துரைகளும் இடம் பெறும். (4)

# செய்முறைப் பரீட்சைகள் 27 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

2022 (2023) க.பொ.த உயர்தரப் பரீட்சையின் அழகியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான செய் முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் ஜூலை 31 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, உள்ளூர் நடனம், இந்திய நடனம் மற்றும் ஓரியண்டல் இசைக்கான செய் முறைப் பரீட்சைகள் ஜூன் 27 முதல் ஜூலை 6 வரையிலும், பொறியியல் தொழில்நுட்ப செய்முறைப் பரீட்சைகள் ஜூலை 12 முதல் ஜூலை 21 வரையிலும், உயிரியல் தொழில்நுட்பத்திற்கான செய்முறைப் பரீட்சைகள் ஜூலை 29 முதல்நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# பட்டப்பகலில் யாழில் இளைஞன் மீது வாள்வெட்டு

(அராலி)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியவிளான் பகுதியில் வைத்து 29 வயதுடைய இளைஞர் மீது நேற்று மதியம் வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞன் தனது நண்பனை சந்திப்பதற்காக இளவாலை பகுதிக்கு வந்துகொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் கொண்ட கும்பல் அவர்மீது இவ்வாறு தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றது.

இதனையடுத்து குறித்த இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை இளவாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

# சமாதான ஊர்வலமும் ஊடகவியலாளர் சந்திப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சர்வமதக் குழுவானது மத நல்லிணக்கத்தை உருவாக்கும் வகையில் நடைபவனி ஒன்றையும் (யாழ்.நூலகத்தில் ஆரம்பித்து வைத்தியசாலை முன் வீதியூடாக நூலகத்தை வந்தடையும்) அதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றையும் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு யாழ்.பொது நூலகத்தில் ஒழுங்கு செய்துள்ளனர்.

ஊடகவியலாளர் சந்திப்பினை காலை 9 மணிக்கு யாழ்.நூலக சிற்றுண்டிச்சாலைக்கு அருகிலுள்ள மண்டபத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன்போது தேசிய சமாதான பேரவையின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஜெகான் பெரேரா, வவுனியா பல்கலைக் கழக வேந்தர் மற்றும் நான்கு மதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தி 4 மதகுருமாரும் உரையாற்ற உள்ளனர். (4)

# ரூபாவின் பெறுமதி சற்று அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று சற்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை ரூ.300.51 ரூபாவாகவும் விற்பனை விலை 319.66 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை ரூ.311.60 ரூபாவாகவும் விற்பனை விலை 328.92 ரூபாவாகவும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அநுராதபுரம் - ஓமந்தை இடையிலான புகையிரத சேவை அடுத்த மாதம் ஆரம்பம்
## ரயில்வே திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

தண்டவாள திருத்தப் பணிகளுக்காக இடைநிறுத்தப்பட்ட அநுராதபுரத்திற்கும் ஓமந்தைக்கும் இடையிலான புகையிரத சேவை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன் துறை வரையிலான ரயில் பயணங்கள் வழமையான கால அட்டவணையின்படி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அநுராதபுரத்திற்கும் ஓமந்தைக்கும் இடையிலான ரயில் பாதை கடந்த ஜனவரி மாதம் தண்டவாள திருத்தப் பணிகளுக்காக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த உதவி வழங்கும் உலக சுகாதார ஸ்தாபனம்

(கொழும்பு)

நாட்டில் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான உதவிகளை வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

நேபாளத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் நளீன் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்திற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை உலக சுகாதார ஸ்தாபனம் வழங்குமென அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 44 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

67 சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளில் டெங்கு நோய் பரவுவதற்கான அபாயம் தொடர்ந்தும் நிலவுவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் நளீன் ஆரியரத்ன குறிப்பிட்டுள்ளார். (நி)

# அரச மருந்தாளர் சங்கம் நாடளாவிய ரீதியில் போராட்டம்

(கொழும்பு)

அரச மருந்தாளர் சங்கம் நாடளாவிய ரீதியில் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

அதற்கமைய நேற்று வெள்ளிக்கிழமை நேற்று இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டமானது மருந்து கட்டுப்பாட்டு அதிகார சபையின் 23 மருந்தாளுனர்களை இடமாற்றம் செய்தமைக்கு எதிராகவே முன்னெடுக்கப்படுவதாக சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக பல வைத்தியசாலைகளில் நோயாளர்கள் சிரமத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## இராசையா இராஜலிங்கம்

( ஓய்வுபெற்ற கிராம சேவையாளர், மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்னாள் செயலாளர், தற்போதைய உப தலைவர் நல்லூர் பிரதேசசபை தமிழரசுக் கட்சி உறுப்பினர், கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, ஞானபண்டித வித்தியாசாலை பழைய மாணவ சங்கங்களின் நிர்வாக உறுப்பினர், கோம்பயன் மணல் இந்து மயான நிர்வாக உப தலைவர் )

யாழ். கொக்குவில் மஞ்சவனப்பதியைப் பிறப்பிடமாகவும் தாவடி பத்தானை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இராஜலிங்கம் அவர்கள் (16-06-2023) நேற்று வெள்ளிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இராசையா - இராசமணி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற - ராசையா அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராதேவி அவர்களின் அன்புக் கணவரும், இராஜகலா(கனடா), ராஜீவா ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோகரன்(கனடா), கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மிருசன், மிசானி, கருணேஸ், சஸ்மிகன் ஆகியோரின் அன்புப் பேரனும், இராசநாயகம், இராஜேஸ்வரன், இரத்தினேஸ்வரன், இரத்தினகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சந்திரபாலன் அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 18-06-2023 ஞாயிற்றுக்கிழமை அன்று நண்பகல் 12:00 மணியளவில் நடைபெற்று பின்னர் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்புகளுக்கு
வீடு - குடும்பத்தினர் Mobile : +94778133010
கிருபா - மருமகன் Mobile : +94777531422
மனோகரன் - மருமகன் Mobile : +16472836291

(C-6757)

தகவல்:-
குடும்பத்தினர்

# டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாட ஆசைப்பட்டேன் - அஸ்வின்



அண்மையில் நடந்து முடிந்த அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான இந்திய அணியில் அஸ்வினுக்கு ஆடும் லெவனில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. இது விவாதப் பொருளானது.

இந்நிலையில் டெஸ்ட் தவரிசையில் நம்பர் வன் பந்து வீச்சாளரான அஸ்வின் இது குறித்து மனம் திறந்து பேசி உள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது "நமது அணி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்னேறியதில் எனது பங்களிப்பும் உள்ளது.

அதனால் நான் இறுதிப் போட்டியில் விளையாட விரும்பினேன். இதற்கு முன்னர் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நான்கு விக்கெட்டுகளை கைப்பற்றி யுள்ளேன். அப்போது சிறப்பாகவும் பந்து வீசி உள்ளேன்.

கடந்த முறை எங்களது இங்கிலாந்து பயணத்தில் 2-2 என்ற கணக்கில் டெஸ்ட் தொடர் சமனில் முடிந்தது. அப்போது நான்கு வேகப் பந்து வீச்சாளர்கள், ஒரு சுழற்பந்து வீச்சாளர் என ஆடும் லெவனில் பவுலர்கள் இருந்தனர். அதுவே இந்த முறையும் அவர்களது எண்ணமாக இருந்திருக்கலாம்.

போட்டி தொடங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன் பாகவே நான் ஆடும் லெவனில் இருக்க வாய்ப்பில்லை எனக்கருதினேன்.

இந்திய அணியின் ஜெர்சியை நான் அணிந்தபோது எனக்கான வாய்ப்பு குறித்து நான் அறிந்திருந்தேன். அதற்கு தயாராகவும் இருந்தேன். அது என் கையிலும் இல்லை. நான் யார்? என்னால் என்ன செய்ய முடியும் என்பது மட்டுமே என் கையில் உள்ளது. சமூக வலைத்தளத்தில் நான் இறுதிப் போட்டியில் விளையாடி இருந்தால் நாம் வெற்றி பெற்றிருப்போம் என சொல்லி இருந்தார்கள். ஆனால், அதில் நான் உறுதியாக இல்லை. நான் எனது சிறப்பான ஆட்டத்தை கொடுத்திருக்கலாம்.

இறுதிப் போட்டி முடிந்ததும் எனது கவனம் டி.என்.பி.எல் கிரிக்கெட் பக்கம் திரும்பியுள்ளது என அவர் தெரிவித்தார். (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2855

தருண்

மச்சான் பழைய பஸ் எவ்வளவு ரேட்டுடா வரும்...?



சூரியவம்சம் படம் பாத்துக்கிட்டு இருந்தான் போல..!

நிருத்திகா

ஆறுமணிக்கே எழுந்து சவுண்டு இல்லாம போன பார்த்திட்டிருந்தவன்...



இன்னைக்கு ஸ்கூல் திறக்குது என்டவுடன வளைச்சி வளைச்சி தூங்கிறான்.

கஜன்

நாட்கள் எவ்வளவு வேகமா போகுது பாத்தீங்களா...?



இப்பதான் சம்பளம் வாங்குன மாதிரி இருந்துச்சு அதுக்குள்ள கையில சல்லி பைசா இல்லை.

கிருசாந்தி

சின்ன வயசுல பேய்னா ரொம்ப பயம்... வளர்ந்ததும் தான் தெரிஞ்சது...



மனுசனுங்க அதவிட பயங்கரமானவங்கன்னு..!

செல்வம்

என் பொண்டாட்டி சமையலை வாயில வைக்கமுடியாது. அவ பேச ஆரம்பிச்சா பைத்தியமே பிடிச்சிடும்... யோவ் பாங்க்ல வந்து ஏன்யா இதையெல்லாம் சொல்லுறே...?



நம்ம கஷ்டத்தை சொன்னாதான் லோன் கிடைக்கும்னு சொன்னாங்க!

விமேஸ்

என்னை இப்படி ஸ்கூல் வண்டியில ஏத்திவுட்டுட்டு...



மை ஏஞ்சல் கோயிங் டு ஸ்கூலுன்னு வாட்ஸ் அப்ல ஸ்டேட்டஸ் போட்டு பீத்திக்காதே.. என் கஷ்டம் எனக்கு தான் தெரியும்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிந்தால் தமிழ் எம்.பிக்களை கைது செய்து பாருங்கள்

## சரத் வீரசேகரவுக்கு செல்வம் எம்.பி சவால்

(குருமன்காடு)

சரத்வீரசேகர இராணுவத்தில் றொட்டி சுட்டுக் கொண்டா இருந்தார். முடிந்தால் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை கைது செய்து காட்டுங்கள் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் அமைச்சர் சரத்வீரசேகர கடந்த காலங்களில் பல கருத்துக்களை கூறியுள்ளார். குறிப்பாக தமிழ் பிரதேசங்களில் நடைபெறுகின்ற அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுக்கின்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார். மாகாண சபை முறையையும் இல்லாது ஒழிக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன் வைத்துள்ளார்.

சரத் வீரசேகர இராணுவத்தில் றொட்டி சுட்டுக் கொண்டா இருந்தார். ஏனெனில் எங்களது மக்களது பிரச்சினை என்பது காலம் காலமாக இருந்து வரும் பிரச்சினை. தங்களது பிரச்சினைகளைப் பேசுவதற்கே மக்கள் பாராளுமன்றம் அனுப்புகிறார்கள்.

அந்தவகையில் தங்களது தேசத்து மக்களது பிரச்சினைகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசுகிறார்கள். இவர் யார்? தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை கைது செய்து சிறையில் அடைக்கச் சொல்வதற்கு இவருக்கு என்ன உரிமை இருக்கிறது? முடிந்தால் அதை செய்து பார்க்கட்டும்.

அவருக்கு சவால் விடுகின்றேன். மக்கள் நலன் சார்ந்து பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களை கைது செய்யுங்கள் பார்க்கலாம். அடுத்து என்ன நடக்கும் என பார்ப்பீர்கள் எனத் தெரிவித்தார். (4-6-250-299)

# கிளிநொச்சியில் கறுவாச் செய்கை தொடர்பில் செயலமர்வு

(கருமபுரம்)



கிளிநொச்சியில் கறுவா செய்கையினை ஊக்குவிக்கும் விதத்தில் கறுவா விதை வழங்கப்பட்டு கறுவா உற்பத்தி தொடர்பான செயல்முறை விளக்கமும் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கனகாம்பிகை குளம் பகுதியில் உள்ள ஜெசுரன் என்பவரது வீட்டில் ஏற்கனவே நடுகை செய்யப்பட்டிருந்த கறுவாமரம் நல்ல வளர்ச்சி கண்டு உள்ள நிலையிலும் அதில் ஆர்வம் காட்டும் நிலையில் குறித்த பிரதேசத்தில் கறுவாச் செய்கையை ஊக்குவிக்கும் விதத்தில் கறுவாச் செய்கையை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது. குறித்த செய்கைக்கான நாற்றுக்களை உற்பத்தி செய்யும் செயல்முறையும் கறுவா உற்பத்தி தொடர்பான கருத்துகளும் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வில் கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜெயசிங்க மற்றும் கறுவா ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-6-316)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 33 1/4
உயரம்: 175 cm
தகைமை/தொழில்: அவுஸ்திரேலியா (விவாகரத்தானவர்)
எதிர்பார்ப்பு:சாதாரண பெண்
தொ.இ: B/13685

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 27 3/4
உயரம்: 5' 9"
தகைமை/தொழில்: BSc மின் பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: IT தொடர்பான தொழில், Teacher
தொ.இ: B/13668

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 32
உயரம்:5' 5"
தகைமை/தொழில்: BSc, Teacher
எதிர்பார்ப்பு:பட்டதாரி/ அரச வேலை
தொ.இ: B/13669

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம் : திருவோணம்
கி.பா: 41 3/4
உயரம் : 5' 6"
தகைமை/தொழில்: கட்ட மேற்பார்வையாளர்
எதிர்பார்ப்பு: தனியார், அரச தொழில்
தொ.இ: B/13677

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பரணி 8 இல் சூரி. செவ்
கி.பா: 45 1/2
உயரம்:170 cm
தகைமை/தொழில்:A/L Teacher
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம் / வெளிநாடு
தொ.இ:G/13749

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம்:4' 8"
தகைமை/தொழில்: BFA
எதிர்பார்ப்பு: படித்த, அரச தொழில்
தொ.இ: G/13755

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்:5' 2'
தகைமை/தொழில்: BBA
எதிர்பார்ப்பு:பயிலுநர் (கணக்காய்வு) உயர்பதவி
தொ.இ:G/13758

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம்:174 cm
தகைமை/தொழில்:BSc Computer Science QA (Private Company)
எதிர்பார்ப்பு: படித்த உத்தியோகமுள்ள ஆண்
தொ.இ:G/13767

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இராசிபலன்

17.06.2023
ஆனி 02, சனிக்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 9.46 மணிவரை
ரோகினி பிற்பகல் 5.07 மணிவரை

சுபநேரம் -2.53-4.23 மணிவரை
இராகுகாலம்-8.53-10.23 மணிவரை
அமாவாசை விரதம்

சந்திராஷ்டமம்- சுவாதி, விசாகம்

வளவன்

**மேஷம்** – எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** – வருமானம் பெருகி வளம் காணும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**துலாம்** – கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**மகரம்** – செய்தொழில் மேன்மையுண்டு, வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** – பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**சிம்மம்** – முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்** – தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்** – உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், தொழிலில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

**மிதுனம்** – வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயனச் சுகக் குறைவான நாள்.

**கன்னி** – பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பயணங்கள் கைகூடும்.

**தனுசு** – இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள், கௌரவமான நாள்.

**மீனம்** – உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரியில் வீடு புகுந்து பெறுமதியான பொருட்கள் திருட்டு

## சில மணி நேரத்தில் மீட்ட பொலிஸார்



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை மூலமாக முறைப்பாடு கிடைத்து சில மணி நேரத்தில் 5இலட்சம் ரூபாய் பெறுமதியான திருட்டுப் பொருட்கள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது நுணாவில் மேற்கு சாவகச்சேரிப் பகுதியில் அமைந்துள்ள வெளிநாட்டில் வசிப்பவரின் வீடொன்றில் இருந்த பல- இலட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் பொருட்கள் வீடு உடைத்து திருடப்பட்டிருப்பதாக நேற்று முன்தினம் வீட்டு பராமரிப்பாளரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் விரைந்து செயற்பட்ட சாவகச்சேரிப் பொலிஸார் சில மணி நேரங்களில் தொலைபேசி உரையாடல்கள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு நாவற்குழிப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த திருட்டுப் பொருட்களை மீட்டதுடன்-திருட்டுச் சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

இதன்போது திருடப்பட்ட பொருட்களான இரண்டு குளிர்சாதன பெட்டிகள், குளிரூட்டி, அவண், தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரம், மின் விசிறி மற்றும் மெத்தைகள் ஆகிய 5இலட்சம் ரூபாய் பொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைதான சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# சிறுதானிய உணவினை ஊக்குவிக்கும் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

சிறுதானிய உணவினை ஊக்குவிக்கும் கண்காட்சி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாய திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது.

சிறுதானிய உணவினை ஊக்குவிக்கும் நாள் என்ற தொனிப்பொருளில் குறித்த கண்காட்சி வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டது.

சிறுதானிய உணவுகளான கம்பு, திணை, வரகு, சாமை என பல வகையான சிறுதானியங்களில் இருந்து எவ்வாறு உணவு தயாரிப்பது அதன் ஊடாக தயாரிக்கப்பட்ட உணவுகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டன.

சிறுதானிய உணவினை வழங்கி தானியங்களை விற்பனை செய்து அவற்றின் ஊடாக ஏற்படும் போஷாக்கு நிலைமைகள் தொடர்பாகவும் இதன் போது காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், பயனாளிகள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (4-6-33)

# சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்க முயற்சித்தவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பிரதேசத்தில் 10வயதான சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்க முயற்சித்த 28 வயதான நபரை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளனர்.

சிறுமியின் தாயார் கடந்த புதன்கிழமை வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே மேற்படி சந்தேக நபரான அயல் வீட்டு இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் சிறுமியை மருத்துவ பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதித்ததில் சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படவில்லை என மருத்துவ அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன.

மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# இராஜகோபுரத்திற்கு அடிக்கல் நாட்டல்

(கரணவாய்)

வல்லிபுர குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலய இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.


ஏழு தளங்களைக் கொண்ட இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நாட்டு விழா முற்பகல் 10 மணி தொடக்கம் 11:55 வரையான சுப நேரத்தில் இடம்பெறும் என புலோலி, வல்லிபுர குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (4-6-60)




கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு தொடக்க விழா நேற்று காலை நடைபெற்றது.

(படம்:சிவசாந்தன்)

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கனகம்புளியடிப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டிருப்பதுடன்-மணல் அகழ்ந்து எடுத்துச் செல்ல பயன்படுத்தப்பட்ட உழவியந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸார் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-30)

# திருமுறை மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக்கழகம், மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையினையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டும், மனனம் செய்யும் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கிலும் திருமுறை மனனப்போட்டியை நடத்தவுள்ளது.

பாலர் வகுப்பு, தரம் 1, 2, 3 மாணவர்களுக்கு இப்போட்டி இடம் பெறவுள்ளது. பாலர் வகுப்பு, தரம் 1, 2 இற்கு பூசுவதும் வெண்ணீறு, முத்திநெறி அறியாத ஆகிய இரு திருமுறைகளும், தரம் 3 இற்கு பூசுவதும் வெண்ணீறு, பால்நினைந்தூட்டும் ஆகிய இரு திருமுறை களும் மனமனம் செய்து ஒப்புவித்தல் வேண்டும்.

இப்போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பாலர் வகுப்பு, தரம் 1 மாணவர்களுக்கு பி.ப 2 மணிக்கும், 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தரம் 2 மாணவர்களுக்கு காலை 9 மணிக்கும் தரம் 3 மாணவர்களுக்கு பி.ப 2 மணிக்கும் யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 23 ஆம் திகதியாகும். போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் 40 புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82(144) நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பி.ப 3மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் பரீட்சைச்செயலர் சு.சிறீகாந்தன் தெரிவித்துள்ளார். (4)

# வாளுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் வாள் ஒன்றுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி பாற்பண்ணை இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த இளைஞன் மூன்றடி நீளமான வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞனை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தரப் பரீட்சையை டிசெம்பர் மாதத்தில் நடத்தத் திட்டம்?



(கொழும்பு)

வருடாந்தம் உயர்தரப் பரீட்சையை டிசெம்பர் மாதத்தில் நடத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளை கொண்டுவர எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சியை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

உயர்தரப் பரீட்சையை குறிப்பிட்ட ஒரு மாதத்தில் நடத்துவதற்கான சட்ட ஏற்பாடு ஒன்று கொண்டுவரப்பட வேண்டும்.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு மீண்டெழத் தொடங்கியுள்ளது.

ஏற்றுமதி பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் புதிய கல்வித் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

புதிய கல்வித் திட்டம் தொடர்பில் ஆராய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதன் அறிக்கையை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் எதிர்பார்த்துள்ளோம்.

13 வருடங்கள் மாணவர்களுக்கு கட்டாய கல்வி அவசியமாகும். எதிர்காலத்தில் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதா? இல்லையா? என்பது குறித்து ஆராயப்படும்.

ஏனைய நாடுகளைப் போன்று எமது கல்வித்திட்டத்தையும் மேம்படுத்தும் வகையில் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சையை குறிப்பிட்ட ஒரு மாதத்தில் நடத்துவதற்கான சட்டம் கொண்டுவரப்படும் எனவும், உரிய அவசியம் இன்றி அந்த பரீட்சை மாற்றுவதனால் அதற்கு பாராளுமன்ற அனுமதி அவசியம் ஏற்படும் வகையில் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## கோர விபத்தில் சிக்கிய பாடசாலை பேருந்து



(கொழும்பு)

தியத்தலாவை பகுதியில், பாடசாலை பேருந்து ஒன்றும், தனியார் பயணிகள் பேருந்து ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானது.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் 5 மாணவர்கள் உட்பட ஆறு பேர் காயமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பொரலந்தையில் இருந்து, பாடசாலை மாணவர்களை ஏற்றிக் கொண்டு பண்டாரவளை நோக்கி பயணித்த பேருந்துடன், மன்னாரில் இருந்து தியத்தலாவை நோக்கி பயணித்த தனியார் பேருந்து மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது, காயங்களுக்கு உள்ளான 5 மாணவர்களும், பாடசாலை பேருந்தின் சாரதியும், தியத்தலாவை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தியத்தலாவை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி)

## இரண்டு திணைக்களங்கள் நிரந்தரமாக மூடப்படவுள்ளன

(கொழும்பு)

இரண்டு திணைக்களங்களை நிரந்தரமாக மூடுவதற்கான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

உள்ளக வர்த்தகத் திணைக்களம், தொலைத்தொடர்பாடல் திணைக்களம் ஆகியவற்றை மூடுவதற்கான வர்த்தமானியே வெளியிடப்பட்டுள்ளது.

இந்த திணைக்களங்கள் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கீழ் இயங்குகின்றன. இந்த நிலையில் அவற்றை நிரந்தரமாக மூடுவதற்கான அதிவிசேட வர்த்தமானி அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. (நி)

# ஆனி மாத இராசி பலன்கள் 16.06.2023-16.07.2023

## மேடம்

**நம்பியவர்களுக்கு கை கொடுத்து உதவும் மேஷ இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, நீச்சம் பெற்ற உங்கள் இராசிநாதன், சனியைப் பார்க்கிறார். எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை. ராகு- கேதுக்களின் ஆதிக்கம் இருப்பதால் ஏற்ற- இறக்கம் கலந்த நிலையே அமையும்.

**மிதுன - புதன்**

ஆனி 3 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். அது புதனுக்கு சொந்த வீடாகும். அவர் அங்குள்ள சூரியனோடு இணைந்து "புத ஆதித்ய யோக"த்தை உருவாக்குகிறார். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். அரசியல்வாதிகளால் ஆதாயம் கிடைக்கும். தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். அரசு வழியில் கடனுதவி கேட்டு விண்ணப்பித்திருந்தால், அது கிடைக்கும். அரசியல் களத்தில் இருப்பவர்களுக்கு நல்ல மாற்றங்களும் ஏற்றங்களும் வந்துசேரும்.

**சிம்ம - செவ்வாய்**

ஆனி 17 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அப்பொழுது குருவின் பார்வை செவ்வாயின் மீது பதிகிறது. இதனால் "குரு மங்கல யோகம்" ஏற்படுகின்றது. எனவே இல்லத்தில் மங்கல ஓசையும் மழலையின் ஓசையும் கேட்கும். குரு பார்வையைப் பலப்படுத்த வியாழக்கிழமை தோறும் குரு பகவான் வழிபாட்டை மேற்கொள்வதோடு, குருவோடு இணைந்திருக்கும் ராகுவையும், அதைப் பார்க்கும் கேதுவையும் யோகபலம் பெற்ற நாளில் வழிபட்டு வந்தால் தடைகள் தானாக விலகும். தக்க விதத்தில் பொருளாதார நிலை உயரும். தொழிலில் இருக்கும் குறுக்கீடுகள் அகலும்.

**சிம்ம - சுக்கிரன்**

ஆனி 18 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அவர் அங்குள்ள செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கல யோக"த்தை உருவாக்குகிறார். அதே நேரம் குரு பார்வை பதிந்த செவ்வாயின் பார்வை, சனி மீது விழுவதால் வியாபாரம் வெற்றிநடை போடும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெளிநாட்டில் இருக்கும் நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். பயணங்கள் பலன் தருவதாக அமையும். பாகப்பிரிவினை சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடக - புதன்**

ஆனி 19 ஆம் திகதி, கடக இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், சுக ஸ்தானத்திற்கு செல்வது நன்மை தான். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். உற்சாகமாக செயற்படுவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட எடுத்த புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

இல்லத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் ஆடம்பரப் பொருட்களையும் வாங்கும் யோகம் உண்டு. பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு ஆதாயம் தரும் தகவல்கள் வந்துசேரும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சலுகைகள் கிடைத்து சந்தோஷம் அடைவர். கலைஞர்களுக்கு நீண்ட இடைவெளிக்குப் பிறகு நல்ல வாய்ப்புகள் வந்துசேரும். மாணவ- மாணவிகளுக்கு தள்ளிப் போட்ட முயற்சிகள் தானாக நடைபெறும். பெண்களுக்கு ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அதிக உழைப்பும், அதற்கேற்ற பலனும் உண்டு. பொறுமையோடு செயற்பட வேண்டிய நேரம் இது.

## ரிஷபம்

**மனதில் நினைத்ததை மறுகணமே செய்ய நினைக்கும் ரிஷப இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, உங்கள் இராசி நாதன் சுக்கிரன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு விரயாதிபதி செவ்வாய் இருப்பதால் விரயங்கள் அதிகரிக்கும். அதே நேரத்தில் வருமானத்திற்கு குறைவிருக்காது. பயணங்கள் அதிகமாகும். ஒரு சிலருக்கு இடமாற்றம், வீடு மாற்றம் ஏற்படும். கடன் தொடர்பான பிரச்சினைகள் குறையும். மன்தை உறுத்திய சில பிரச்சினைகளுக்குத் தெளிவான முடிவெடுக்கும் நேரம் இது.

**மிதுன - புதன்**

ஆனி 3 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். அது அவருக்கு சொந்த வீடாகும். தனாதிபதி வலிமையடையும் இந்த நேரம் பணப்புழக்கம் நன்றாக இருக்கும். வருமானப் பற்றாக்குறை அகல புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வியாபார நுணுக்கங்களை அறிந்து கொண்டு அதை மேம்படுத்துவீர்கள். அரசாங்கம் மூலம் நடைபெறும் காரியங்கள் சாதகமாக இருக்கும். மேலும் மிதுனத்தில் உள்ள சூரியனோடு புதன் இணைந்து "புத ஆதித்ய யோக"த்தை உருவாக்குவதால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு தலைமைப் பொறுப்புகள் தானாக வந்துசேரும்.

**சிம்ம - செவ்வாய்**

ஆனி 17 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அப்பொழுது குருவின் பார்வை செவ்வாய் மீது பதிகிறது. எனவே "குரு மங்கல யோகம்" உருவாகிறது. இதன் விளைவாக் தாய்வழி ஆதரவு கிடைக்கும் தக்க விதத்தில் உடல்நலம் சீராகும் வீடு, இடம்வாங்கும்யோகம்உண்டு. பத்திரப் பதிவில் இருந்த தடை அகலும். நீண்டதூரப் பயணங்கள் சாதகமாக அமையும். சிம்மத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய், கும்பத் தில் உள்ள சனியைப் பார்க்கிறார். எனவே இக்காலத்தில் நவக்கிரகப் பரிகாரங்களைச் செய்வதன் மூலம் நற்பலன்களை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**சிம்ம - சுக்கிரன்**

ஆனி 18 ஆம் திகதி, சிம்மத்திற்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கல யோக"த்தை உருவாக்குகிறார். இது ஒரு பொற்காலமாகும். தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்தவர்கள் விலகிச்செல்வர். குருவின் பார்வை பதிந்த செவ்வாய், சனியைப் பார்ப்பதால் கைநழுவிச் சென்ற ஒப்பந்தங்கள் மீண்டும் வந்துசேரும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் ஒத்துழைப்பு திருப்தி தரும். வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம்.

**கடக - புதன்**

ஆனி19- ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், சகாய ஸ்தானத்திற்கு வரும்பொழுது குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். கொடுக்கல் - வாங்கல்கள் சீராக அமையும். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாகவும், கடல் தாண்டிச் சென்று மேற்படிப்பு படிப்பது சம்பந்தமாகவும் எடுத்த முயற்சி கைகூடும். பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்குப் புதிய பொறுப்புகள் கிடைக்கும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் லாபம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக ஊழியர்களின் ஒத்துழைப்பு திருப்திதரும். கலைத்துறையில் உள்ளவர்களுக்கு மாதத்தின் பிற்பாதியில் புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். மாணவ - மாணவிகளுக்கு நினைவாற்றல் அதிகரிக்கும். முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். பெண்களுக்கு குடும்ப நிர்வாகத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த இலாகா மாற்றம் உண்டு. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 206





இவ்வாறு மக்களின் மனத்தில் புகைந்து வரும் அதிருப்தி எதில் போய் முடியப் போகிறதோ என்று சிந்தித்துக் கொண்டே குந்தவை தேவியின் மாளிகையை அடைந்தான்.

ஆழ்வார்க்கடியர்னிடம் உலக நடப்பைக் குறித்துப் பேசுவதில் இளையபிராட்டிக்கு எப்போதும் விருப்பம் உண்டு.நாடு நகரமெல்லாம் திரிந்து அவன் ஆங்காங்கு நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வருவான். அதையெல்லாம் அறிந்து கொள்ளுவதில் அரசிளங்குமரி ஆவல் கொண்டாள். அவன் தேடிக் கொண்டு வந்து பாடிக் காட்டும் ஆழ்வார் பாசுரங்களைக் கேட்பதிலும் இளையபிராட்டிக்குப் பிரியம் உண்டு. ஆகையால் திருமலை நம்பி எப்போது வந்தாலும் ஆர்வத்துடன் வரவேற்பாள். முகமலர்ச்சியுடன் அவனிடம் யோகக்ஷேமங்களைப் பற்றி விசாரிப்பாள்.

ஆனால் இன்றைக்கு இளவரசியின் முகபாவத்திலும் பேச்சிலும் சிறிது மாறுதல் தோன்றியதை ஆழ்வார்க்கடியான் கண்டான். மனது எங்கேயோ எதிலேயோ ஈடுபட்டிருப்பதைக் காட்டும் முகபாவம் பேச்சில் இயற்கைக்கு மாறான ஒரு பரபரப்பு கொஞ்சம் தடுமாற்றம்.

"திருமலை! என்ன விசேஷம்? எங்கே வந்தாய்?" என்று குந்தவை கேட்டாள்.

"விசேஷம் ஒன்றுமில்லை, தாயே! வழக்கம் போல் தாங்கள் உலக நடப்பைக் குறித்து விசாரிப்பதற்கு வரச் சொன்னதாக நினைத்துக் கொண்டு வந்தேன். மன்னிக்க வேண்டும் போய் வருகிறேன்".

"இல்லை, இல்லை! கொஞ்சம் இருந்து விட்டுப் போ! நான்தான் உன்னை வரும்படி சொன்னேன்." "தாயே! சொல்ல மறந்து விட்டேன்! சற்று முன் பெரிய பிராட்டியின் சந்நிதியில் இருந்தேன். தங்களிடம் ஏதோ முக்கியமான செய்தி சொல்ல வேண்டுமாம் தங்களை வரும்படி சொல்லச் சொன்னார்கள்."

"ஆகட்டும் நானும் போகத்தான் எண்ணியிருக்கிறேன். நீ இந்தப் பிரயாணத்தில் எங்கெங்கே போயிருந்தாய்? அதைச் சொல்லு!"

"தென் குமரியிலிருந்து வட வேங்கடம் வரையில் போயிருந்தேன்." "போன இடங்களில் ஜனங்கள் என்ன பேசிக் கொள்ளுகிறார்கள்?"

"சோழ குல மன்னர் குலத்தின் பெருமையைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள். இன்னும் சில காலத்தில் வடக்கே கங்கா நதி வரையிலும், ஹிமோத்கிரி வரையிலும் சோழ மகாராஜ்யம் பரவி விடும் என்று பேசிக் கொள்கிறார்கள்."

"அப்புறம்?"

"பழுவேட்டரையர்களின் வீரப் பிரதாபங்களைப் பற்றியும் பாராட்டிப் பேசுகிறார்கள். சோழ சாம்ராஜ்யம் இவ்வளவு உன்னத நிலைமையை அடைந்ததற்குக் காரணமே பழுவூர்ச் சிற்றரசர்களின்.."

"போதும், இன்னும் என்ன சொல்லுகிறார்கள்?"

"தங்களுடைய சகோதரர்கள் இருவரையும் பற்றி ஆசையோடு பேசிக் கொள்கிறார்கள். முக்கியமாக இளவரசர் அருள்மொழிவர்மர் மீது குடிமக்களுக்கு இருக்கும் அன்பையும் ஆதரவையும் சொல்லி முடியாது." "அதில் ஒன்றும் வியப்பில்லை தான்! இன்னும் ஏதேனும் பேச்சு உண்டா?"

"சோழ மகா சக்கரவர்த்தியின் திருக்குமாரிக்கு ஏன் இன்னும் திருமணம் ஆகவில்லையென்று பேசிக் கொள்கிறார்கள். என்னைக் கூடப் பலரும் கேட்டார்கள்." "நீ என்ன மறுமொழி சொன்னாய்?"

"எங்கள் இளையபிராட்டியை மணந்து கொள்ளத் தகுதி வாய்ந்த அரசகுமாரன் இன்னும் இந்தப் பூவுலகில் பிறக்கவில்லை என்று சொன்னேன்."

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## உடைந்த பானை!



ஒருகிராமத்தில் ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான்.

அவன் தன் வீட்டுத் தேவைக்காகத் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

தண்ணீர் எடுத்து வரஅவன் இரண்டு பானைகளை வைத்திருந்தான். அந்தப் பானைகளை ஒரு நீளமான கழியின் இரண்டு முனைகளிலும் தொங்கவிட்டு கழியைத் தோளில் சுமந்து செல்வான்.

இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய ஓட்டை இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும் பொழுது, குறையுள்ள பானையில் பாதியளவு நீரே இருக்கும்.

குறையில்லாத பானைக்குத் தன் திறன் பற்றி பெருமை. குறையுள்ள பானையைப் பார்த்துத் எப்பொழுதும் அதன் குறையைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே இருக்கும்.

இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன.

கேலி பொறுக்க முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டது.

"ஐயா! என் குறையை நினைத்துத் நான் மிகவும் கேவலமாக உணர்கிறேன்.

உங்களுக்கும் தினமும் என்குறையால், வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்தி, உங்கள் வேலைப் பளு மிகவும் அதிகரிக்கிறது. என் குறையை நீங்கள் தயவு கூர்ந்து சரி செய்யுங்களேன்."

அதற்கு விவசாயி, "பானையே ! நீ ஒன்று கவனித்தாயா ? நாம் வரும் பாதையில், உன் பக்கம் இருக்கும் அழகான பூச்செச் செடிகள் வரிசையைக் கவனித்தாயா? உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும்.

அதனால் தான் வழி நெடுக பூச்செடி விதைகளை விதைத்து வைத்தேன். அவை நீ தினமும் சிந்திய தண்ணீரில் இன்று பெரிதாக வளர்ந்து எனக்கு தினமும் அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்துத் நான் வீட்டை அலங்கரிக்கிறேன். மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன்"

இதைக் கேட்ட பானை கேவலமாக உணர்வதை நிறுத்தி விட்டது. அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப்படாமல் தன் வேலையைக் கருத்துடன் செய்யத் தொடங்கியது.

**நீதி:**

அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப்பட்டால், நாம் எந்த வேலையையும் செய்ய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நமது எண்ணங்களின் மீது கவனம் வைக்க வேண்டும். கெட்ட எண்ணங்கள் மிகவும் ஆபத்தான திருடர்கள். – ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனி நம் வீதிகளில் வாகனங்கள் பற்றி எரியும் கவனம்

மனித சமூகத்தை அழிக்கவல்ல போதை வஸ்தை கடத்தி, விற்பனை செய்து வாழ நினைக்கின்ற ஒரு கூட்டம் உருவாகிவிட்ட பின்பு, மனிதம் என்ற பதம் அகராதியில் இருந்து அகற்றப்பட வேண்டியதாயிற்று.

ஆம், மனிதனை அழித்து மனிதன் வாழ நினைக்கின்ற அளவில் பேராசை மனிதர்களைப் பித்தர்களாக்கிவிட்டது.

அதன் விபரீதம் போதைக்கு அடிமையான பிள்ளைகளை மீட்டெடுப்பதற்காகப் பெற்றோர் அல்லும் பகலும் கண்ணீர் விடுகின்றனர். இருந்தும் அவர்களின் கண்ணீருக்குப் பதில் கூறவேண்டியவர்கள் மௌனமாக இருக்கின்றனர்.

உண்மை, ஒருபுறத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள் 14 ஆண்டுகளைக் கடந்தும் கண்ணீரும் கம்பலையுமாக அலைகின்ற அதேநேரம் மறுபுறத்தில் தம் இளம் பிள்ளைகள் போதைக்கு அடிமையாகித் தமது குடும்பத்தை நடுத்தெருவில் நிறுத்திவிடுகின்ற கொடுமை தீராத் துன்பமாக நீடிக்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், எப்படியெல்லாம் அநீதி செய்து பணம் சம்பாதிக்க முடியுமோ அதையெல்லாம் செய்கின்ற பெருங் கூட்டம் மனித குலத்தை அழிக்கவந்த அரக்கர் கூட்டம் என்றுரைப்பது முற்றிலும் உண்மையானது.

ஆம், பாலுக்குள் தண்ணீ, அரிசிக்குள் குறுங்கல், தேனுக்குள் சர்க்கரைப் பாணி என கலப்படம் செய்கின்ற கொடுமைகளின் மத்தியில் டீசலுக்குள் மண்ணெண்ணெய் கலக்கின்ற கயமைக்கூட்டத்தால், மனித உயிர்கள் எரிந்துமாளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஆம், டீசலுக்குள் மண்ணெண்ணெய் கலந்த இருப்புகள் இப்போது வெளியில் வரத் தொடங்கியுள்ளன.

இதனால் வீதியில் ஓடிக்கொண்டிருக்கும் வாகனங்கள் திடீரெனப் பற்றி எரிகின்றன. தெய்வாதீனமாக உயிராபத்துக்கள் இதுவரை ஏற்படவில்லை.

ஆனால் வாகனங்கள் முற்றாக எரிந்து நாசமாகிவிடுகின்றன.

என்னே! கொடுமை. ஓர் ஏழை கடன்பட்டு வாகனம் எடுத்து அதனை வாடகைக்கு ஓடி உழைத்து தன் குடும்பத்தைக் காப்பாற்றப் பாடுபடுகையில், டீசலுக்குள் மண்ணெண்ணெய் கலந்த பாதகச் செயலால் வாகனம் எரிந்து கரியாகிவிட, அந்த ஏழையின் தலையில் இடிவிழுந்து போகிறது.

இதுவே நம் நிலைமை என்றால், எங்ஙனம் மனித குலம் வாழ முடியும்.

ஆக, எரிபொருள் நிலையங்கள் தமக்குக் கிடைக்கின்ற எரிபொருட்களின் தரத்தை உறுதி செய்ய வேண்டும். அதேசமயம் எரிபொருள் அடங்கிய கொள்கலன்களை எடுத்து வருகின்ற சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட கடமையைக் கண்ணியத்துடன் செய்ய வேண்டும்.

கூடவே இவை யாவற்றையும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மேற்பார்வை செய்து எரிபொருளின் தரத்தை உறுதி செய்ய வேண்டும்.

இதைச் செய்யாமல்விட்டால், இனி வாகனங்கள் பற்றி எரிவது தடுக்க முடியாத விடயமாக ஆகிவிடும்.

## குருந்தூரில் தொல்பொருள் அடையாளங்களை அகற்ற எவருக்கும் உரிமை இல்லை

### சரத் வீரசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

குருந்தூர் மலையில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகள் மற்றும் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நடுகை தூண்களை அகற்ற எவருக்கும் உரிமை இல்லை. பேச்சுவார்த்தை ஊடாக பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தயாராக உள்ளோம். பலவந்தமான முறையில் எவருக்கும் இடமளிக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மஹரகம பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதால் நாடு முழுவதும் பௌத்த சின்னங்கள் மற்றும் மரபுரிமைகள் காணப்படுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகளை அடிப்படையாக கொண்டு எவ்வித முரண்பாடுகளும் தோற்றம் பெறவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளை அந்த மாகாணங்களின் அரசியல்வாதிகள் தமது அரசியல் தேவைக்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள். அரசியல்வாதிகளின் அனுசரணையுடன் தொல்பொருள் மரபுரிமைகள் அழிக்கப்படுகின்றன.

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் கடந்த எட்டாம் திகதி இடம்பெற்ற சந்திப்பின் போது ஜனாதிபதி மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் குறிப்பிட்ட விடயம் பொய் என்பதை தொல்பொருள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுர மனத்துங்க தெளிவுபடுத்தவில்லை..

குருந்தூர் மலையில் தமிழர்கள் விவசாயம் செய்ததாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் குறிப்பிட்ட கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாது.

குருந்தூர் மலையில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகள், அடையாளப்படுத்தப்பட்ட நடுகை தூண்களை அகற்ற எவருக்கும் உரிமை இல்லை.

குருந்தூர் மலை விவகாரத்தில் தோற்றம் பெற்றுள்ள முரண்பாடுகளுக்கு பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காண தயாராக உள்ளோம். அதனை விடுத்து பலவந்தமான முறையில் செயற்பட்டால் நாங்களும் அந்த வழியில் செல்ல நேரிடும் என்றார். (ம-7)

## நுவரெலியா–வெதமன் வீதியில்
## மண்மேடு சரிந்ததில் இருவர் உயிரிழப்பு

(நுவரெலியா)

நுவரெலியா - வெதமன் வீதி பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று பிற்பகல் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விருந்தகம் ஒன்றுக்கு மதில் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது. இதனையடுத்து மண்ணில் புதையுண்ட இருவர் குறித்த பகுதி மக்களால் மீட்கப்பட்டு நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் காலி - ஹில்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 40 மற்றும் 25 வயதுடைய இருவரே உயிரிழந்துள்ளனர். இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## கால்நடைத் துறையின் அபிவிருத்திக்காக

### 1,500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

நாட்டின் கால்நடைத் துறையின் அபிவிருத்திக்காக 1,500 மில்லியன் ரூபா ஒதுக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

உலக வங்கி 2023-2027 ஆண்டுகளில் விவசாயத்துறைக்கு 3,800 மில்லியன் ரூபா தொகையினை வழங்க உள்ளது. இந்த தொகையில் ரூ.1,500 மில்லியன் கால்நடை துறை மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தவிர விவசாய வலயங்களில் வீதி வலையமைப்புகளை அபிவிருத்தி செய்வதற்கும் 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இதுவரையில் புனரமைக்கப்படாத கிராமப்புற விவசாய வீதிகளை புனரமைப்பதற்காக இந்த நிதி ஒதுக்கீட்டை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தை விவசாயத் திட்டங்களுக்கு பயனுள்ள வகையில் பயன்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை (14) விவசாய அமைச்சில் இடம்பெற்றது. கால்நடை வளர்ப்புத் துறையின் அபிவிருத்திக்காக இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி 2014 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஒதுக்கப்பட்ட அதிக தொகை எனவும் கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக கால்நடைத்துறைக்கு அதிக நிதி இல்லாததால் நாட்டின் பால் மற்றும் முட்டை உற்பத்தி மற்றும் ஒட்டுமொத்த கோழித் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7)

## எதிர்வரும் 20-23 திகதிகளில் பாராளுமன்ற அமர்வுகள்

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தின் தீர்மானத்திற்கமைய பாராளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அதன் பிரகாரம் இம்மாதம் 20 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடவுள்ளது. (ம-7)

## எதிர் காலத்தில் கல்வி டிஜிட்டல் மயமாக்கப்படும்

### கல்வி அமைச்சர் சுசில்

(கொழும்பு)

எதிர் காலத்தில் கல்வி டிஜிட்டல் மயமாக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற கல்லூரி ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கும் பிரதான நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்காலத்தில் விஞ்ஞான பீட கற்பித்தல் டிப்ளோமாவை நான்கு வருடங்களாக நீடித்து பட்டப்படிப்பாக அபிவிருத்தி செய்து டிப்ளோமா முடித்த ஆசிரியர்கள் பட்டதாரிகளாகும் சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

அரசு மற்றும்பிற சேவைகளின் டிஜிட்டல் மயமாக்கல் திட்டம் தொடர்பாக கல்வித்துறைக்கு சொந்தமான பகுதியை நடைமுறைப்படுத்த தேவையான திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கூறினார். (ம-7)

## மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

இன்று சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி முதல் 7 மணி வரை எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் ஜி. ஆர். சீதாலட்சுமி வழங்குவார்கள்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (4-6)

## சட்டவிரோத மணல் அகழ்வு பூநகரி பகுதியில் அதிகரிப்பு

பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் மண் அகழ்வு இடம் பெறுவதாக மக்கள் குற்றம் சுமத்தி உள்ளனர்.

அத்துடன் இது தொடர்பாக பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தும் எந்தப் பயனுமற்று போயுள்ளதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (4-6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா எல்லை மீள் நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட எல்லை மீள் நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தலைமையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, வவுனியா மாவட்டத்தில் உள்ள மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு சில கிராம அலுவலர் பிரிவுகளை பிரிப்பதற்கும் சில பிரிவுகளை இணைப்பதற்கும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

வவுனியா மாவட்டத்தில் உள்ள மக்கள் நிர்வாக நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளும் பொருட்டு வவுனியா பிரதேச செயலக பிரிவில் பட்டாணிச்சூர், வேப்பங்குளம், பண்டாரிக்குளம், கூமாங்குளம், உக்குளாங்குளம், மகாறம்பைக்குளம் என்பனவும் செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் மெனிக்பாம், ஆண்டியா புளியங்குளம் என்பனவும் தனி கிராம அலுவலர் பிரிவுகளாக பிரிப்பதற்கும் கலாபோகஸ்வேவ உள்ளிட்ட 4 சிங்களக் குடியேற்ற கிராமங்களின் நிர்வாக நடவடிக்கையை வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களில் செயலாளர்கள், திணைகளத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-6-250)



கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கணித விஞ்ஞான பிரிவு உருவாக்கப்பட்ட முதல் ஆண்டில் தெரிவாகிய வைத்தியர் மற்றும் பொறியியலாளர்களாக வெளியேறியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பாடசாலை ஒன்றுகூடலில் இடம்பெற்றது. (படம்:-சப்தசங்கரி)

## வடமாகாண சட்டத்தரணிகள்-மருத்துவர்களுக்கான மாபெரும் துடுப்பாட்ட சமர் இன்று

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சட்டத்தரணிகள் கிரிக்கெட் அணியினருக்கும் வடமாகாண மருத்துவர் கிரிக்கெட் அணியிருக்குமான மாபெரும் துடுப்பாட்டச்சமர் நிகழ்வானது இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

35 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இப்போட்டியில் வடமாகாண கிரிக்கெட் அணிக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிபதி அந்தோனிப்பிள்ளை யூட்சன், வடமாகாண மருத்துவர் அணிக்கு புற்றுநோய் சத்திரசிச்சை நிபுணர் கணேசமூர்த்தி சிறிதரன் ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர்.

இந்நிகழ்வுக்கு வடமாகாணத்தை சேர்ந்த பெருமளவான மருத்துவத்துறை சார்ந்தவர்களும் சட்டத்துறை சார்ந்தவர்களும் பங்கேற்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## சாவகச்சேரி சந்திரசேகர சிவன் ஆலய மஹோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அமிர்த பாஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலய மஹோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் இடம்பெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (4-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 140 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 380 | 400 | 500 |
| தக்காளி | 260 | 300 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 220 | 200 | 200 |
| கோவா | 300 | 250 | 300 | 300 |
| கரட் | 350 | 380 | 400 | 450 |
| பூசணி | 100 | 100 | 80 | 120 |
| புடோல் | 130 | 140 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 140 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 380 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 150 |
| பாகற்காய் | 450 | 400 | 500 | 700 |
| வெண்டக்காய் | 150 | 180 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 130 | 200 | 180 | 200 |
| பயற்றங்காய் | 400 | 350 | 350 | 400 |
| லீக்ஸ் | 320 | 380 | 380 | 400 |
| பீற்றூட் | 400 | 350 | 400 | 500 |
| கறிமிளகாய் | 380 | 380 | 480 | 400 |
| முருங்கைக்காய் | 1500 | 1000 | 1200 | 1200 |
| போஞ்சி | 550 | 480 | 480 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 160 | 160 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 50 | 60 |
| தேசிக்காய் | 350 | 250 | 350 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 80 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 260 | 280 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 350 | — | 700 |
| முள்ளங்கி | 120 | 200 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 | 50 |
| வல்லாரை | 40 | 35 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 200 | — | 200 |


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2023

கீழ்வரும் இறைச்சிக் கடைகளினை (01.07.2023 - 31.12.2023) காலப்பகுதி வரைக்குமான குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 19.06.2023 -26.06.2023 நண்பகல் 12.00 மணி வரை

கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி : 26.06.2023 பிற்பகல் 02.00 மணி வரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 26.06.2023 பிற்பகல் 02.00 மணி

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "இறைச்சிக்கடைகள் கேள்வி கோரல் - 2023" என எழுதி இரு பிரதிகளினையும் **"தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கு எதிர்வரும் **26.06.2023 ஆம் திகதி பிற்பகல் 02.00** மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | |
| 01 | வளலாய் கோழியிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 94,829.14 |
| | கோப்பாய் உப அலுவலகம் | | | |
| 01 | கோப்பாய் கோழியிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 237,737.50 |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | |
| 01 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 224,810.52 |
| 02 | உரும்பிராய் கோழியிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 275,250.00 |

01 குறிப்பிட்ட இறைச்சிக்கடைகளிலிருந்து 1/2 கி.மீற்றர் சுற்றாடலில் ஆட்டிறைச்சி, கோழியிறைச்சி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. திண்மக்கழிவு அகற்றுதல் தொடர்பில் சபையினது அறிவுறுத்தல்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

02 கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையுடன் சமுகமளிக்கும் போது அதன் நிழற்படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வதிவிடத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதாவதொரு பிரதி (மின்சாரக் கட்டணப்பட்டியல், வங்கிக்கணக்குப் புத்தகப்பிரதி) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03 கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித்தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி செலுத்தப்படவேண்டும்.

04 உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

05 ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

06 கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது ஒரு பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

07 விலை மதிப்பீட்டுத்திணைக்களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்.

08 உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இல 03/2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இது தொடர்பான விபரங்களை கேள்விப்பத்திரங்களைப் பெறும் போது தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

09 கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

2023.06.17

(C-6751)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்டோ பாலத்...

முச்சக்கரவண்டி அருகில் இருந்த பாலத்தினுள் வீழ்ந்து விபத்திற்குள்ளாகியது.

விபத்தில்பலத்த காயமடைந்த பெண் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் மறவன்குளம் பகுதியைச் சேர்ந்த 61 வயதான பெண்ணே மரணடைந்தவராவார்.

(ம-7,299)

## வவுனியாவில்...

வவுனியா கன்னாட்டி பகுதியில் பாடசாலைக்கு தனது மகளை அனுப்புவதற்காக சென்றதாயும் அவரது 6 வயதான மகளும் ஹன்டர் ரக வாகனம் மோதியதில் சம்பவ இடத்திலேயே உடல்நசுங்கி பலியாகினர்.

நேற்றுக்காலை 7 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

கன்னாட்டி பகுதியில் இருந்து பூவரசங்குளம் பாடசாலைக்கு செல்வதற்காக குறித்த தாயும் மகளும் அவர்களது வீட்டிற்கு முன்பாக உள்ள வீதியில் பேருந்துக்காக காத்திருந்தனர்.

இதன்போது வவுனியாவில் இருந்து மன்னார் பகுதி நோக்கி வேகமாக பயணித்த ஹன்டர் ரக வாகனம் வீதியை விட்டு இறங்கி கரையில் நின்ற அவர்கள் மீது மோதியது.

விபத்தில் தாயும் மகளும் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பலியாகினர். மற்றொரு சிறுவன் ஹன்டர் ரக வாகனத்தை கண்டதும் ஓடிச்சென்று விபத்தை தவிர்த்துக் கொண்டதாக விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தில் அதேபகுதியை சேர்ந்த சிவலோகநாதன் சுபோகினி (வயது-36), அவரது மகளான டினுசிகா (வயது-6) ஆகியோரே உயிரிழந்தனர்.

குறித்த விபத்து இடம்பெற்றபோது ஹண்டர் ரக வாகனத்தில் மூவர் பயணித்திருந்தனர். விபத்தை அடுத்து அவர்களில் ஒருவர் தப்பிச்சென்ற நிலையில் ஏனைய இருவரையும் ஊர்மக்கள் துரத்திப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை விபத்தையடுத்து பொறுமை இழந்த பொதுமக்கள் ஹன்டர் வாகனத்தை சரமாரியாக தாக்கி சேதப்படுத்தியதுடன் அதனை எரிப்பதற்கு முற்பட்டனர்.

இதனால் குறித்த பகுதியில் குழப்பமான சூழல் ஏற்பட்டிருந்ததுடன் மன்னார் வீதியுடனான, போக்குவரத்தும் சிலமணிநேரங்கள் பாதிக்கப்பட்டிருந்தது.

சம்பவஇடத்திற்கு சென்ற பொலிஸார் நிலைமையை கட்டுப்படுத்தியதுடன் விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-7,299)

## காங்கேசன்துறை...

சர் நிமால் சிறிபால டி சில்வாவினால் வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர், யாழ்.இந்தியத் துணைத் தூதுவர், கப்பல்துறை அமைச்சின் செயலர், துறைமுகங்கள் அதிகாரசபையின் அதிகாரிகள், வட பிராந்திய கடற்படை தளபதி, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், கடற்படை உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கப்பலில் வந்தடைந்த இந்தியாவைச் சேர்ந்த சுற்றுலா பயணிகளை அமைச்சர் அடங்கிய குழாம் வரவேற்றதோடு, கப்பலின் கட்டனுக்கு நினைவுப் பரிசிலும் கையளிக்கப்பட்டது.

(ம-7,33,104)

## சென்னை...

கப்பல் ஒன்று நேற்றுக் காலை காங்கேசன்துறையை வந்தடைந்தது.

சுற்றுலா பயணிகளுடன் வந்த கப்பலை விமான சேவைகள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வரவேற்றார்.

சென்னை - யாழ்ப்பாணம் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான பரீட்சார்த்த முயற்சியாக நேற்று முன்தினம் இரவு சென்னையில் இருந்து புறப்பட்ட கப்பல் நேற்றுக் காலை காங்கேசன் துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

விமான சேவைகள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, 25 கோடி ரூபாய் பெறுமதியில் அமைக்கப்பெற்ற துறைமுக முனையத்தையும் திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். இந்திய துணை தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கர், கப்பல்துறை அமைச்சின் செயலர், துறைமுகங்கள் அதிகாரசபையின் அதிகாரிகள், வட பிராந்திய கடற்படை தளபதி, யாழ். அரசாங்க அதிபர் மற்றும் கடற்படை உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

(ம-7,33,104)

## வாகனங்களை...

ரின் பெறுமதி சற்று அதிகரித்தது.

நம் நாட்டில் சிலர் டொலரில் முதலீடு செய்கின்ற நிலையில் அவர்களும் டொலரினை கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளனர்

இவற்றின் விளைவாகவே டொலரின் பெறுமதி 320 ரூபாயாக எகிறியது.

அத்துடன் நேற்று மீண்டும் 306 ரூபாய் என்ற நிலைக்கு வந்ததையும் பார்த்தோம். இது ஒரு அசாதாரணமான சூழ்நிலை அல்ல, தேவை மற்றும் விநியோகத்தின் அடிப்படையில் நிகழும் சாதார்ண ஒரு விடயம்.

எனினும் தற்போதைக்கு வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்க முடியாது என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## கப்பல் சேவையை...

காங்கேசன்துறை துறைமுக பயணிகள் முனையம் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்பொழுது காங்கேசன் துறையில் பயணிகள்முனையம்பல மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் காங்கேசன் துறைமுகத்துக்கிடையிலான பயணிகள் கப்பல் சேவையினை ஆரம்பிப்பதற்குரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அது எவ்வளவு காலத்தில் முடியும் என தற்பொழுது கூற முடியாது அது இந்த வருட கடைசியாக இருக்கலாம் அல்லது அடுத்த வருடமாக இருக்கலாம். ஆனால் வேலைகள் முடிவற்ற பின்னர் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும்.

காங்கேசன் துறைக்கும் இராமேஸ்வரத்துக்கு இடையில் பயணிகள் கப்பல் சேவையினை ஆரம்பிப்பது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களுக்கு இடையில் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றது.

எனினும் இராமேஸ்வர பகுதியில் சில வேலைத்திட்டங்கள் கப்பல் சேவை ஆரம்பிக்க முன்னர் முன்னெடுக்க வேண்டிய தேவையும் உள்ளது. இதன் காரணமாக தற்போதைய சூழ்நிலையில் உடனடியாக கப்பல் சேவையினை ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனினும் இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களின் தொடர் முயற்சியின் பயனாக விரைவில் கப்பல் சேவை ஆரம்பிக்க கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

(ம-7,33,104)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1602
வெற்றி இலக்கங்கள்
மேசம் 9 8 9 4 4 1
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1177
O 07 21 22 59
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.16
சீட்டிழுப்பு இலக்கம் 3389
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
P 06 28 43 74
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 16/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1495
வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள்
O 02 17 30 31 32

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.16
சீட்டிழுப்பு இலக்கம் 456
வெற்றி இலக்கம் | வெற்றி இலக்கங்கள்
கடகம் 08 15 18 59 கடகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/16
சீட்டிழுப்பு இலக்கம் 5147
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
C 7 7 5 1 4 5
தேசிய லொத்தர் சபை

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 39 05 31 63 77
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1297
வர்ணம் ஊதா
திகதி 2023.06.16 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 338,331,969.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2121 | நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.06.16 | தினம் வெள்ளிக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,595,460/-
W 28 30 39 59
DLB

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.16
வெற்றி வாரம்: 4282
வர்ணம்: செம்மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,650,704.90
வெற்றி இலக்கங்கள்
13 20 54 65 M
DLB

சசிரி
வெற்றி வாரம் 337
சீட்டிழுப்பு திகதி 2023.06.16
பச்சை
வெற்றி இலக்கங்கள் 10 14 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,940,220/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,376,028.40
திகதி 2023-06-16
வெற்றி வாரம் 3833
வர்ணம் கரும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 39 48 50 55
மேஷம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,427,400/-
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 1947
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2023.06.16
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 52,446,842.40
வெற்றி இலக்கங்கள்
01 07 12 20 K
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபம் - யாழ் நகர்

## வர்த்தகப் பிரிவு A/L 2025

ஆரம்பம் :- 18.06.2023 ஞாயிறு மாலை 3 மணி

| | |
|---|---|
| பொருளியல் | M. லிஜிதன் |
| கணக்கீடு | V. தமிழ்ஈசன் |
| வணிகக்கல்வி | B. கோபிதன் |

அனுமதிகள் வழங்கப்படுகின்றது

தொடர்புகளுக்கு... 077 2247781

(15990)

## பலாலி...

அமைச்சர் காதர் மஸ்தான். பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர். யாழ்ப்பாணத் திற்கான இந்திய துணைத் தூதுவர்.விமான நிலைய உயர் அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நேற்று கலந்துரையாடலில் விமான நிலையத்தை வடக்கு பக்கமாக விஸ்தரிப்பது டன் விமான சேவையை அதிகரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

பாரியளவிலான விமானங்கள் வந்து இறங்க வேண்டும் என்பது தொடர்பிலும் அதிகளவான ஆசனங்களை கொண்ட விமா னங்களை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் தொடர்ந்து அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் யாழ்ப் பாண மக்கள் இலகுவான முறையில் பிர யாணத்தை மேற்கொள்ள முடியும் எனவும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டது.

அத்துடன் இறங் குதளம் விஸ்தரிக் கப்பட வேண்டுமெ னவும் மக்களுடைய காணிகளுக்கு பாதி ப்பு ஏற் படுத்தாமல் மேலும் நிலங்கள் சுவிகரிக் கப்படாமல் எப்படி யாக செய்ய முடியும் என்பது தொடர்பில் இதன் போது ஆராயப்பட் டது. .(ம-7.33,104)

# தீபம் யாழ் நகர்

டேவிட் வீதி, (கலைக்கோட்டம் அருகில்)

## A/L 2025

### கலை, வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம் : 18.06.2023 ஞாயிறு மாலை 3 மணி

அனுமதிகளுக்கு : 077 224 7781

(15990)

## விற்பனைக்கு

- 26 அடி நீளமுடைய Container Box விற்பனைக்கு (Store தேவைகளுக்கு உகந்தது)
- Hero Honda CD 100 SS மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு

075 887 5036

(15985)

## தவறவிடப்பட்டுள்ளது

13.06.2023 செவ்வாய்க்கிழமை 5.30 மணியளவில் கன்னாதிட்டி வீதியிலிருந்து யாழ் பஸ் தரிப்பிடத்துக்கிடையில் கல் வைத்த நெக்லஸ் ஒன்று தவற விடப்பட்டுள்ளது. யாராவது கண்டெடுத்தால் தயவு செய்து கீழ்க்காணும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்

076 980 8159

(C-6754)

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் புத்தக, போட்டோ கொப்பிக் கடைக்கு அனுபவமுள்ள/ அனுபவமற்ற ஊழியர்கள் தேவை.

- யாழ் நகருக்கு அண்மையிலுள்ளோர் விரும்பத்தக்கது.
- தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

077 248 7801

(15977)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

VISA
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம். | V2 TRAVELS

0777-068-777

(C-6756)

## உடனடி வேலைவாய்ப்பு

### சமையல் உதவியாளர்கள்

வல்வெட்டித்துறையில் இயங்கும் உணவகத்திற்கு தங்கியிருந்து சமையல் செய்யக்கூடியவர்கள் தேவை.

- முன்அனுபவம் விரும்பத்தக்கது.
- ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.



சம்பளம்: 50,000

(C-6756)

CIMS 49A, CHAPEL STREET, JAFFNA 777-068-777

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 4 பரப்பு காணி விற்பனைக்கு

- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ஒரு பரப்பின் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி

(15987)

076 739 0413
076 436 5814

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 33 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(15978)

076 733 6047
076 755 8606

# மரண அறிவித்தல்



## திருமதி சிவானந்தராசா புஸ்பலீலா

அல்லையம்பதி துன்னாலை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவானந்தராசா புஸ்பலீலா அவர்கள் 14.06.2023 புதன்கிழமை அன்று தாயகத்தில் இயற்கை எய்தினார்.

அன்னார் சிவானந்தராசாவின் பாசமிகு துணைவியாரும் காலஞ் சென்றவர்களான தணிகாசலம் - மகேஸ்வரி இணையர்களின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சரஸ்வதி இணையர்களின் அன்பு மருமகளும் தினேஸ், சுகந்தினி, தனுஷா, கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வராணி, ஜெனிஸ், ஜெயசிலன், சதீஸ்கரன் ஆகி யோரின் அன்பு மாமியாரும் அபிஷனான், அஸ்மி, டினுயன், அக்ஷனா, நிகாஸ், நிலாஸ், நிறுஷா ஆகியோரின் பாசமிகு பாட்டியும் புஸ்பராணி, அமரர் புஸ்பரஞ்சிதம், அமரர் தங்கவடிவேல், வைகுந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவனேசன், ஞானவதி, வசந்தகுமாரி, யாழினி, அமரர் கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது புகழுடல் இன்று (17.06.2023) சனிக்கிழமை காலை 9 மணி முதல் அவருடைய இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகளைத் தொடர்ந்து பூதவுடல் காலை 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்லையம்பதி
துன்னாலை, கரவெட்டி. (C-6750)

தகவல்:- குடும்பத்தினர்
077 281 0723 (மருமகன்)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org